விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: ஆறு

*Valampurii*

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 13 ஞாயிற்றுக்கிழமை (27.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## மனித உரிமை மீறல் மோசமடையும்

# இலங்கை மீது யப்பான் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(டோக்கியோ)

இலங்கைக்கு மிகவும் அதிகளவு நிதி உதவிகளை வழங்கிவரும் யப்பான், இலங்கைமீது அதிக அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## மிக் ரக யுத்த விமானங்களை கொள்வனவு செய்ய அரசு முடிவு

(கொழும்பு)

அரசு நான்கு மிக்-29 ரக யுத்த விமானங்களையும் நான்கு எம்.ஐ-24ரக யுத்த உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது.

இந்த யுத்த விமானங்களை கொள்வனவு செய்வதற்காக விமானப்படை பொறியியலாளர் ஏயார் வைஸ் மார்சல் பிரசாந்த டி சில்வா தலைமையில் விசேட குழுவொன்று மிக விரைவில் ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுக்கு செல்லவுள்ளது.

ஏற்கனவே (06 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான நிதியுதவியை யப்பான் நிறுத்தமாட்டாது

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(டோக்கியோ)

இலங்கைக்கான நிதி உதவியை யப்பான் நிறுத்த மாட்டாது எனவும் திட்டமிட்டவாறு வழங்கும் எனவும் அந் நாட்டின் வெளிநாட்டு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத்துமாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் யப்பானிய அரசிடம் கோரியிருந்தது.

இந் நிலையில் யப்பான் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை எதிர் காலத்திலும் வழங்கத்திட்டமிட்டிருப்பதாகவும் உதவிகளை (06 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிப்பு

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மீண்டும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை எதிர்வரும் மாதத்தில் இருந்து அதிகரிக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாகவும் சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்த (06 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச்சாவடிகள் தொடர்ந்தும் மூடியநிலையில்



சாவடிகள் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதனால்

### பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் உட்பட நால்வர் விடுதலை

## தொடர்ந்தும் மூடியநிலையில்



(கொழும்பு)

வவுனியா ஓமந்தை மற்றும் மன்னார் உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடிகள் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதனால் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திலிருந்து விடுதலைப்புலிகளின் பிரதேசங்கள் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினதும் விடுதலைப்புலிகளினதும் முன்னரங்க காவல் நிலைகளுக்கிடையில் இருந்து பொதுப் போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபடும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் பாதைகள் திறந்திருக்கும் போது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஓமந்தை சோதனைச் (06 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் உட்பட நால்வர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழ்ப் பெண் 35 நாட்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் விமலா என்பவர் வெளிநாடு செல்வதற்கான பணிகளை மேற்கொள்ள கொழும்பு சென்று வெள்ளவத்தையில் தனது உறவினர்களுடன் தங்கியிருந்தார்.

அவர் அங்கிருப்பதை பொலிஸாருக்கு தெரிவிக்கவில்லை எனக்கூறி பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த கல்கிசை நீதி மன்ற நீதிபதி பாலசுப்ரமணியம் விமலாவை பிணையில் விடுவித்துள்ளார்.

இதேபோல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மூன்று யாழ்.வர்த்தகர்களையும் கல்கிசை நீதிமன்றம் விடுவித்துள்ளது. நித்தியானந்தம் மயூரன் (வயது 32) ; கோபாலன் செந்தூரன் (வயது 28) மற்றும் கோபாலன் கங்காதரன் (வயது 24) ஆகியோர் யாழ்.திருநெல்வேலியில் சொந்தமாக வர்த்தக நிறுவனங்களை நடாத்தி வருகின்றனர்.

தங்கள் வர்த்தக நிறுவனங்களுக்கான பொருட்களை (06 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் சேவைக்கான நேர்முகத் தேர்வு ஜூன் இரண்டாம் வாரத்தில் நடைபெறும்

### யாழ்ப்பாணத்தில் நடத்தவும் ஏற்பாடு

(திருகோணமலை)

இலங்கை அதிபர் சேவை தரம் III தரம்IIற்கு இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இந் நேர்முகப்பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் மொத்தம் 540 பேரில்; யாழ்.கல்வி வலயத்தில் 210 பேரும்,வலிகாமம் கல்வி வலயத்தில் 130 பேரும்,வடமராட்சி கல்வி வலயத்தில் 91 பேரும்,தென்மராட்சி கல்வி வலயத்தில் 74 பேரும் மற்றும் தீவகக் கல்வி வலயத்தில் 35 பேரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேர்முகப்பரீட்சைக்கு ஒரு நாளிற்கு 60 பேர் தோற்றவுள்ளார்கள் எனவும் யாழ்ப்பாணத்தில் 9 நாட்கள் நடைபெறவுள்ளதாகவும் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இந் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றவுள்ளோர் பின்வரும் ஆவணங்களை கொண்டு வருவதுடன் (06 ஆம் பக்கம் பார்க்க)

## அழைப்பு விடுத்தால் கலந்துகொள்வோம்

### ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எமது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்வோம்.

தேசிய பிரச்சினையைத் தீர்க்கும் செயற்பாட்டில் எமது கட்சி எப்போதும் பொறுப்புடன் நடந்து கொள்ளும். இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை ரீதியிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் சர்வகட்சிக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளுமாஎனக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டம் விரைவில் இடம்பெறும் என்று தெரிவிக்கப் (02 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கொழும்புக் குண்டுத் தாக்குதல் இருபது பேரிடம் விசாரணை

(கொழும்பு)

கொழும்புக் கோட்டைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக 20 பேரிடம் விசாரணை நடத்தப் பட்டுள்ளது.ஆறு சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மேலதிக விசாரணைகளைத் தொடங்கவுள்ளதாகக் கொழும்புக் குற்றப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

இதனிடையே குண்டுத் தாக்குதலில் காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தஇருவர் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத்துவமனைப் பேச்சாளர் தெரிவித்தார். (ந-5)

## கடற்படை அதிகாரிகள் மாலைதீவுக்கு விஜயம்

மாலைதீவுக் கடற்பிரதேசத்தில் அண்மையில் மாலைதீவுக் கடற்படையினரால் அழிக்கப்பட்ட புலிகளின் ஆயுதப் படகு தொடர்பாக விசாரணைகள் நடத்த இலங்கைக் கடற்படையின் அதிகாரிகள் குழு ஒன்று மாலைதீவு சென்றுள்ளது.

தமிழ்நாட்டுப் பொலிஸாரின் உதவியுடன் இலங்கைக் கடற்படை அதிகாரிகள்குழு மாலைதீவில் மேற்படி ஆயுதப் படகு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அழிக்கப்பட்ட படகிலிருந்து கைது செய்யப்பட்ட ஐந்து புலி உறுப்பினர்கள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். இலங்கைக் கடற்படையின் அதிகாரிகள் குழு மேற்கொள்கின்ற விசாரணைகள் தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் அளவில் இராணுவத் தளபதிக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படகிலிருந்து கைது செய்யப்பட்ட ஐந்து புலி உறுப்பினர்களையும் இலங்கையிடம் ஒப்படைக்குமாறும் இலங்கை வெளிவிவகார அமைச்சு மாலைதீவிடம் கோரிக்கை விடுத்துள்ளபோதும் அதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (ந-5)

## உற்பத்திப் பொருள் காட்சியகம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட காரியாலயத்தில் 'உற்பத்திப் பொருள் காட்சியகம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிலையத்தில் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் உற்பத்தியாளர்கள் தங்களுடைய நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்மாதிரிகள், மாதிரிகளின் புகைப் படங்கள் மற்றும் நிறுவன சம்பந்தமான விபரங்களைக் காட்சிப் படுத்துவதற்கு ஆர்வம் இருப்பின் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சரை எதிர்ப்பதில் இலங்கை பின்வாங்கியது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கென ஐரோப்பியஒன்றியத்தினால் நியமிக்கப்பட்டப் பிரதிநிதியும் தற்போதைய பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சருமான பேனாா்ட் குசுனெரை எதிர்ப்பதிலிருந்து இலங்கை அரசு பின்வாங்கியுள்ளது.

இவரது நியமனத்திற்கு ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவர் எதிர்ப்புத் தெரிவித்த போதும் நாம் குசுனெருக்கு எதிரானவர்கள் அல்ல என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

நான் வெளிவிவகார அமைச்சர். எனவே வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாகவே பேசுவேன். நான் உத்தியோகபூர்வத் தூதுவர் அல்ல. நான் குசுனெரின் நியமனத்தை எதிர்க்கவில்லை எனக் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே றோகித போகொல்லாகம மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நியமனத்தை இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலக்க எதிர்த்திருந்தார். இந்த நியமனம் இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கான வழி என அவர் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமைகள் தொடர்பான விசாரணைகள் அனைத்துலக தராதரத்துக்கு அமைய நடைபெறுகின்றதா? என கண்காணிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சுதந்திர அனைத்துலக நிபுணர் குழுவின் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியான குசுனெர் கடந்த வருடம் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கையில் மனித உரிமைகளில் அனைத்துலகத்தின் கண்காணிப்பு ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருந்ததாக குசுனெர் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்து பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. பரானஸை தளமாகக் கொண்ட எல்லைகளற்ற மருத்துவ சேவை நிறுவனத்தின் நிறுவுநரும் தலைவருமான குசுனெர், இலங்கையில் வெளிநாடுகளின் தலையீட்டைத் தூண்ட முயற்சிக்கின்றார் என தயான் ஜெயதிலக்கவும் அரசு சார் ஊடகங்களும் குற்றஞ்சுமத்தியிருந்தன.

எனினும் குசுனெர் பிரான்ஸில் வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றதனால் அவர் தொடர்ந்து இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியாக இருப்பாரா? எனத் தனக்குத் தெரியாது என றோகித போகொல்லாகம தெரிவித்தார். (ந-5)

## மதுரைச் சிறையில் 78 இலங்கைக் கைதிகள் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை

மதுரை மத்திய சிறைச்சாலையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆறுபேர் உட்பட இதுவரை இலங்கைக் கைதிகள் 78 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மதுரைச் சிறையின் பாதுகாப்பினை அதிகரிப்பது குறித்து பொலிஸ் உயர் அதிகாரிகள் சிறப்பு ஆலோசனை நடத்தியுள்ளனர்.

பாதுகாப்பிற்காக சிறையைச் சுற்றி 60 பொலிஸார் மேலதிகமாக நியமிக்கப்படவுள்ள அதேவேளை கண்காணிப்புக் கோபுரங்களும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெடிமருந்துகள், ஹெரோயின் போதைப் பொருள்கள் போன்ற தடை செய்யப்பட்ட பொருள்கள் இராமேஸ்வரம் வழியாகக் கடத்தப்பட்டு வருவது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மதுரையில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் பலர் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்நிலையில் அண்மையில் குமரி கடற்பகுதியில் வெடி பொருள்களைக் கடத்தி வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஆறுபேர் இந்தியக் கடலோர ரோந்துப் படையினரால் கைது செய்யப்பட்டு மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனால் சிறைக்குக் கூடுதல் பாதுகாப்பு அளிக்குமாறு மதுரைப் பொலிஸ் ஆணையாளருக்குச் சிறைப் பாதுகாப்பு உயர்அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பொலிஸ் உயர் அதிகாரிகள் மதுரையில் ஆலோசனை நடத்தியுள்ளனர். அப்போது சிறையைச் சுற்றி சிறப்புப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 60 பொலிஸாரைக் கூடுதலாக நியமிக்கவும் சிறையில் உள்ள 4 கண்காணிப்புக் கோபுரங்களுடன் வெளிபகுதியில் கூடுதலாக 2 கோபுரங்கள் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளன. (ந-5)

## யாழ்.கல்வி வலய மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டியாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் முதலாம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் இப் போட்டிகள் இடம் பெறும்.

இப்போட்டிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களை இத் திகதிகளில் கடமையாற்ற வருமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி போட்டிகள் யாவும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## பௌத்த அமைப்புக்களின் கூட்டமைப்பை சந்திக்கப் பிரித்தானியத் தூதரகம் முடிவு

இலங்கையின் பௌத்த அமைப்புக்களின் கூட்டமைப்பினைச் சந்திக்கப் பிரித்தானியத் தூதரகம் முடிவுசெய்துள்ளது. பௌத்த அமைப்புக்களின் கூட்டமைப்பு தெரிவித்து வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்கமளிக்க இச் சந்திப்பு நடைபெறவுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் சில்கொட் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெறும் என்றும் பிரித்தானியத் தூதுவரகத்தின் அரசியல் பிரிவுப் பிரதிநிதி இச் சந்திப்பில் பங்கேற்பார் என்றும் சில்கொட் கூறியுள்ளார். (ந-5)

## நெடுந்தீவுக்கான படகுச் சேவை மூன்றாவது நாளாகவும் நிறுத்தம்

நெடுந்தீவுக்கான படகுச் சேவை நேற்று மூன்றாவது நாளாகவும் தடைப்பட்டிருந்தது. இதனால் நெடுந்தீவுக்கும் ஏனைய இடங்களுக்குமான போக்கு வரத்துக்கள் யாவும் முடங்கிப் போயுள்ளன.

நெடுந்தீவுக் கடற்படை முகாம் மீது கடந்த 24 ஆம் திகதி விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்தே நெடுந்தீவுக்கான படகுச்சேவை தடைப்பட்டுள்ளது.

படகுச் சேவை தடைப்பட்டுள்ளதனால் யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்குச் சென்ற அரச பணியாளர்கள் உட்படப் பலர் மீளவும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப முடியாதுள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந)

பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர் (ஆண்)

வயது:- 35 தொடக்கம் 50 வரை

கல்வித் தகைமை:- க.பொ.த.உயர்தரத்தில் சித்தி

ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் தொடர்பாடல்திறன் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

யாழ்.நகர மையத்திலிருந்து 6 கி.மீ.தூரத்திற்குள் வசிப்பவர்கள் தமது விண்ணப்பத்தை, *நிர்வாக உத்தியோகஸ்தர்,இல.3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்,
வலம்புரி.

## சாவகச்சேரித் தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்தவர் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாகவுள்ள இராணுவக் காவலரண் மீது அடையாளம் தெரியாத நபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை 4.30 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனிடையே தென்மராட்சிப் பகுதியில் நேற்றுப் பகல் நேர ஊரடங்கு உத்தரவை இராணுவம் பிரகடனப் படுத்தியது. (ந-5)

SPOKEN ENGLISH

இளைப்பாறிய ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து தனிஆள் அல்லது சிறுகுழுக்கள், பல்கலைக்கழக மாணவர் கள், உத்தியோகஸ்தர்கள் மற்றும் வெளிநாடு போக விருப்பவர்களுக்கு குறுகிய காலத்திற்குள் எளிமையான முறையில் இலக்கணத்துடன் கூடிய பேச்சு ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

K.சோமசுந்தரம்,
இல.6, மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
(083) T.P:- 021 4591001

பதவி வெற்றிடங்கள்

✦ கணனி இயக்குநர்கள்

(ஆண்கள், இரவுக் கடமை)

(தமிழில் ரைப்பிங் செய்து பக்கம் அமைக்கும் அனுபவம் உடையவர்கள் மாத்திரம்)

✦ அலுவலகச் செய்தியாளர்கள்

(ஆண்கள்,வெளிக்களம்)

(தகைமை:- க.பொ.த.உயர் தரத்தில் சித்தி, முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)

✦ மொழி பெயர்ப்பாளர்

(ஆண்கள்,இரவுக் கடமை)

(ஆங்கிலம்-தமிழ்)

✦ பத்திரிகை மடிப்பவர்கள்

(முன்னனுபவமுள்ளவர்கள்)

பொதுத் தகைமை

❖ மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் யாவரும் யாழ்.நகர மையத்திலிருந்து 6 கி.மீ. தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

❖ தகைமையுடையோர் பிற்பகல் 3 மணிமுதல் மாலை4.30 மணிவரையில் அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்,
வலம்புரி.

## அழைப்பு விடுத்தால்...

பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எங்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டால் நாங்கள் அதனைச் சாதகமாகவே ஆராய்வோம். பெரும்பாலும் கலந்துகொள்வோம் என்று கூறமுடியும்.

காரணம் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாங்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்ள மாட்டோம்.

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படுகின்ற அரசியல் தீர்வின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் ஆரம்ப காலத்திலிருந்து வலியுறுத்தி வருகின்றோம். அதனைத் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தனிப்பிட்ட ரீதியில் தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்காது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண சில மாதங்களுக்கு முன்னர் யோசனை ஒன்றை முன்வைத்தார். அதனைச் சில திருத்தங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது.

எனவே நாங்கள் இன்னுமொரு யோசனை முன்வைக்க வேண்டிய அவசிய இல்லை. இதேவேளை நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்ந்து கேள்விக்குறியாகிக் கொண்டு செல்கின்றது.

மக்களின் பாதுகாப்பை அரசாங்கமே உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் அரசாங்கம் தனது பொறுப்பைச்சரியான முறையில் நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை.

மக்களின் வாழ்க்கை முறை குழப்பமடைய இடமளிக்கக் கூடாது. எப்படியிருப்பினும் உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதனை எமது கட்சி உறுதியாக கூறுகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடிய சூழலை அரசாங்கமே உருவாக்க வேண்டும். (ந-5)

# இலங்கை யுத்தத்தில் வெல்வது யார்?

இலங்கையில் இடம்பெறும் ஓயாத போரில் இதுவரை இராணுவத்தினர் தங்களால் கொல்லப்பட்டதாக வெளியிட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை தொகுத்துப் பார்த்தால் விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதுவரை இருபகுதியினராலும் வெளியிடப்பட்ட காயப்பட்டோர் அல்லது இறந்தவர்களின் எண்ணிக்கைகளில் இன்று பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது.

இலங்கையின் பிரகடனப்படுத்தப்படாத யுத்தமானது கடல், நிலம், வான்பரப்பு மூன்றிலும் சம பலமுடையதாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.



வியாழக்கிழமை அதிகாலையில் அரச கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாட்டின் நெடுந்தீவில் இடம்பெற்ற நிகழ்வை எடுத்துக்கொண்டால் கடற்புலிகளின் ஒரு சிறு கூட்டமான படகுகள் கடற்படை தளம் ஒன்றின் மீது தாக்குதலை மேற்கொண்டது.

இதில் இராணுவத்தின் கூற்றுப்படி தங்களின் எதிர்த் தாக்குதலில் 4 எதிராளிகளின் படகுகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் மேலும் 2 படகுகள் தாக்கப்பட்டதாகவும் 18 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் 4 கடற்படை வீரர்கள் மட்டுமே உயிரிழந்ததாகவும் கூறுகின்றார்கள்.

இதே நிகழ்வில் எதிராளிகளின் எண்ணிக்கைகள் முற்றாக மாறுபட்டதாவுள்ளது. அவர்கள் தாம் கடற் படைத்தளத்தினை 20 நிமிடங்களில் அழித்து அதனை சில மணித் தியாலயங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத் திருந்ததாகவும் கூறுகின்றார்கள்.

அத்துடன் தாம் 35 கடற்படை வீரர்க

ளின் சடலங்களை எண்ணியதாகவும் தம்மில் நால்வர் உயிரிழந்ததாகவும் கூறுகின்றனர். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்ற தேசிய சமாதான ஆலோசனை சபையினைச் சேர்ந்த ஜெகான் பெரேரா கூறுகையில்,

'எங்களுக்கான பிரச்சினை என்னவென்றால் உண்மையில் அங்கே என்ன நடக்கின்றது என்பது தெரியாது. ஏனென்றால் அவ்விடங்களுக்கு பொதுமக்களோ அன்றி ஊடகவியலாளர்களோ சென்று பார்க்க முடியாது' என்கிறார்.

இரு பகுதியினரும் தங்கள் பிரதிநிதிகளுக்கும், தங்கள் மக்களுக் கும் யுத் தம் வெற்றிகரமாக நடை பெறுகின்றது என்று வெளிப் படுத்த வேண்டியுள்ளது.

அரச தரப்பைப் பொறுத்தளவில் மக்களின் நம்பிக்கையைப் பெற்று மக்களிடம் இருந்து அர சாங்கத்திற்கு ஒத்துழைப்பை பெறவேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் மக்களை திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் மக்கள் இதனால் பல பாதிப்புக்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

## மேலோங்கல் (Upper hand)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், இரு பகுதியினராலும், இத்தகைய தாக்குதல் இடம்பெறும் இடங்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

தெற்கில் பெரும்பான்மை சிங்கள மக்களிடையே அண்மைக் காலமாக வடக்குக் கிழக்கில் தமிழர்க்கென ஓர் நாடு வேண்டுமென்று போராடும் விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் அரசின் கையோங்கி நிற்பதாக ஓர் நம்பிக்கை. 2006இல் அரசு கிழக்கில் மிகுந்த காட்டுப் பிரதேசத்தை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.

தை மாதத்தின் நடுப் பகுதியில் இருந்து யுத்தம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வட பகுதியின் எல்லைப் பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டது.

இலங்கை இராணுவத்தினர் சிறு சிறு பகுதிகளாக எதிர் நிலைகளைத் தாக்கி அழிக்க முயற்சிக்கின்றனர். இதற்காக அந்நிலைகளை நோக்கி வான் தாக்குதல்களும், ஆட்லறி செல் தாக்குதல்களும் நடாத்தி வருகின்றனர்.

## இழப்பு இல்லை (Not losing)

பாதுகாப்பு அமைச்சின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கவின் கூற்றுப்படி, கடந்த 4 மாதங்களில் கிட்டத்தட்ட 550 எதிராளிகள் கொல்லப்பட்டும், இராணுவத்தினர் 50 பேர் மட்டும் உயிரிழந்துமுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கூற்றுப்படி கிட்டத்தட்ட 60 பேர் வரையில் தங்களில் உயிரிழந்துள்ள தாக தெரிவிக்கின்றனர்.



பிரிகேடியர் சமரசிங்க 'பொய் கூறுகின்றார்' அவர்கள் உண்மையில் என்ன நடக்கின்றது என்பதைக் கூற விரும்பவில்லை. அவர்கள் தங்கள் பிரதேசத்தையும் போராளிகளையும் இழந்துள்ளார்கள் என்கிறார்கள்.

அரசாங்கம் இரண்டு மூன்று வருடங்களுக்குள் தாங்கள் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப் போம் என்று கூறி வருகிறார்கள். ஆனால் புலிகள் தாம் எதையும் இழக்கவில்லை என் கின்றார்கள்.

கிழக்கை எடுத்துப் பார்த்தால் தாம் மீள சகல நடவடிக்கைகளையும் கடந்த 25 வருடங்களில் மேற்கொண்ட மாதிரியே நடாத்துவதாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் கூறுகின்றார்.

## யுத்த தந்திரப்படி சமநிலை

(Strategic balance)

விடுதலைப் புலிகளின் முதலாவது விமானத் தாக்குதல் தலைநகரில் நடாத்தப்பட்டதன் பின்னர் யுத்த சமநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

இதனால் பௌதிக ரீதியில் அதிக நஷ்டம் ஏற்படாவிட்டாலும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அரசு கட்டாயமாக பாதுகாப்பு செலவினத்தை கூட்டவேண்டியுள்ளதால் அரச பொருளாதார நிலையில் மிகுந்த தாக்கம் ஏற்படுகிறது.

இதில் பாரிய கேள்வி என்னவெனில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு போரை நடாத்த இடம் கொடுக்குமா? அவர்கள் கடனாக எல்லாம் வாங்குகின்றார்கள். நாங்கள் சண்டை பிடிக்கின்றோம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் வழங்க வேண்டியிருக்கும் என்கிறார் அத்தாஸ்.

2002ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தினை இரு பகுதியினருமே அலட்சியம் செய்துள்ளனர். இரு பகுதியும் சரியான எண்ணிக்கையை வழங்காவிட்டாலும் இறப்பு எண்ணிக்கை உயர்கின்றது. பாதுகாப்பு அமைச்சின் தகவலின்படி டிசம்பர் 2005 இலிருந்து 4,600 மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் திரும்பவும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இரு பகுதியினரும் மேலும் ஒரு சந்ததி வரை சென்றாலும் இரு பகுதியினரும் வெல்லப் போவதில்லை.

பி.பி.சி. ஆய்வு

# இலங்கை அகதியெனக் கூறி பிரான்சில் வசித்த இந்தியர் இந்திய விமான நிலையத்தில் கைது

இலங்கை அகதியெனக் கூறி 16 ஆண்டுகளாக பிரான்சில் வசித்து வந்த கேரளாவைச் சேர்ந்த ஒருவர் தற்போது குட்டு வெளிப்பட்டதையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய குடியுரிமை அதிகாரிகளின் தொடர் விசாரணையில் உண்மை வெளிவந்ததையடுத்து சென்னை விமான நிலைய பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கேரள மாநிலத்தைச் சேர்ந்த ராகவன் நாயர் என்பவர் சென்னையை அடுத்த ஆலந்தூரில் பல ஆண்டுகளாக வசித்து வந்தார். இவரது மகன் சபரிநாதன் வயது 37 பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்தார். இவர் கடந்த புதன்கிழமை இரவு லுப்தான்சா ஏர் லைன்ஸ் விமானம் மூலம் சென்னை வந்தார்.

சென்னை விமான நிலையத்தில் அவரிடம் வழக்கமான குடியுரிமைச் சோதனைகள் நடத்தப்பட்டன.

அப்பொழுது அவரின் கடவுச்சீட்டில் அவரது பெயர் தனசிங்கம் என்றும் இலங்கையைச் சேர்ந்தவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் அவரின் நடை, உடை, பாவனை ஆகியவை குடியுரிமை அதிகாரிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தின. இதைத் தொடர்ந்து அவரிடம் தீவிரம் விசாரணை நடத்தப்பட்டது. அப்பொழுது பல தகவல்கள் கிடைத்தன.

கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்னர் கே.கே. நகரில் இலங்கையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் வசித்து வந்துள்ளனர். அவர்களின் ஒத்துழைப்போடு இலங்கை அகதி என்ற போர்வையில் தவறான தகவல் கொடுத்து சபரிநாதன் பிரான்ஸ் சென்றுள்ளார். அங்கு ஒரு ஹோட்டலில் மாதம் 50 ஆயிரம் ரூபா சம்பளத்தில் பணிபுரிந்து வருகிறார்.

இடையில் இந்தியா வந்த சபரிநாதன் கேரளாவைச் சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார். குழந்தைகளும் உள்ளன.

இந்நிலையில் 16 ஆண்டுகளுக்கு பின்னர் சபரிநாதன் இலங்கையைச் சேர்ந்தவர் இல்லை என்பதும் கேரளாவைச் சேர்ந்தவர் என்பதும் குடியுரிமை அதிகாரிகளின் விசாரணையில் தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து விமான நிலையப் பொலிஸாரிடம் சபரிநாதன் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் வழக்குப்பதிவு செய்து அவரை சிறையில் அடைத்துள்ளனர். (அ-5)

# வடக்குக் கிழக்கில் காணிப் பதிவாளர்களாக தமிழில் தோற்றியோரை நியமிக்க கோரிக்கை

வட கிழக்கு மாகாணங்களில் நிலவும் மேலதிக காணி மாவட்ட பதிவாளர்களாக தமிழ் மொழியிலான பரீட்சைக்குத் தோற்றி தேறியோரை நியமிக்குமாறு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எம்.எஸ் எஸ். அமீர் அலி உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஏழு மேலதிக காணிப்பதிவாளர் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

அண்மையில் இப் பதவிகளை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுள்ளது. (அ-5)

## மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

அரசாங்க சேவையில் கனிஷ்ட ஊழியர்களை முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த(சா/த) பரீட்சையில் மொழி/இலக்கியம், எண்கணிதம்/தூயகணிதம்/ஆரம்ப கணிதம்/வர்த்தககணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்துள்ள 2006.12.31 ஆம் திகதியில் அரச சேவையில் 5 வருட திருப்திகரமாக சேவையாற்றி உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் 2007.06.26 ஆம் திகதிக்குள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தை சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். (அ)

## உயர்தரப் பரீட்சைக்கு அடையாள அட்டை

தேசிய அடையாள அட்டை இலக்கமின்றி நிராகரிக்கப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக குறித்த விண்ணப்பதாரிகளிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். இம் மாதம் 30ஆம் திகதிக்குப் பின்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டையின் இலக்கம் குறிப்பிடப்படாமை மற்றும் கிராம சேவை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படாத சுமார் 800 தனிப்பட்ட பரீட்சாத்திகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. தேசிய அடையாள அட்டையின்றி தனிப் பட்ட பரீட்சாத்தி கள் விண்ணப்பப் படிவத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலை மாத்திரம் ஏற்றுக் கொள்வதாக பரீட்சாத் திகளுக்கு ஏற்கனவே அறிவித்தல் விடப்பட்டிருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ)

## வலுவூட்டல் கம்பிப் பாவனை

கட்டடங்களுக்கு தரம் குறைவான வலுவூட்டல் கம்பிகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள பொறியியலாளர் சங்கத்தின் வடமாகாண நிலையம், எஸ்.எல்.ஐ.எஸ் இனால் HS, GTB, ISL மற்றும் CN (10.12.16mm கம்பிகள் மட்டும்) குறியீடு இடப்பட்ட கம்பிகளைப் பாவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# இன்று ஒரு தகவல்

## மனமும் நிறமும் !

ஒரு நண்பர் வந்தார். மிகவும் இறுக்கமாக உடை அணிந்திருந்தார். ஆடைக்குள்ளே அவர் மாட்டிக் கொண்டிருந்த மாதிரித் தெரிந்தது.

"ஏன்... துணி குறைச்சலாக எடுத்துவிட்டீர்களா?"என்று கேட்டேன். "இல்லீங்க... எனக்கு எப்பொழுதும் இறுக்கமாக உடையணிவது தான் பிடிக்கும்" என்றார்.

ஒருவர் எப்படி உடையணிகிறவர் என்பதை வைத்தே அந்த ஆள் எப்படிப்பட்டவர் என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். உடை அணியும் விதம் ஒருவருடைய மன நிலையை வெளிப்படுத்துமாம்.

இறுக்கமான உடையணிபவர்கள் பொதுவாக மன நிம்மதி இல்லாதவர்களாக இருப்பார்களாம்! கோபக்காரர்களாக இருப்பார்களாம் !

தொள தொளப்பாக ஆடை அணிபவர்கள் அமைதியான ஆளாக இருப்பார்களாம்! சாந்தமாக இருப்பார்களாம்! சண்டைக்குணம் இல்லாதவர்களாக இருப்பார்களாம்!

அதனாலே தான்... போர் வீரர்களுக்கெல்லாம் இறுக்கமான உடைதான் கொடுப்பார்கள். ஆனால் சந்நியாசிகளைப் பாருங்கள்! அவர்களுக்கெல்லாம் தொள தொளப்பான உடைகள் தான்! அவர்களெல்லாம் "டைட் பாண்ட்" போட்டுக் கொண்டு நிற்கமாட்டார்கள்.

அதே மாதிரி சந்நியாசிகள் காவி உடையைத் தேர்ந்தெடுப்பதற்கும் காரணம் உண்டு. பல ஆண்டுகள் சோதனை செய்து பார்த்துவிட்டுத்தான் சந்நியாசத்துக்கு காவி தான் சரியென்று முடிவு பண்ணியிருக்கிறார்கள்.

பௌதிக விஞ்ஞானப்படியும் அதுதான் சரி! சூரிய ஒளியிலே ஏழு வண்ணங்கள் உண்டு.

ஒரு பொருள் மேலே அது விழும்போது... அந்தப் பொருள் நமக்குச் சிவப்பாகத் தெரிந்தால்... அந்தப் பொருள் சிவப்பைத் தவிர மற்ற எல்லா நிறங்களையும் உள்வாங்கிக் கொண்டு சிவப்பு நிறத்தை மட்டும் விட்டு விடுகிறது...

அதாவது, விலகி விடுகிறது. அதனாலே தான் அந்தப் பொருள் சிவப்பாகத் தெரிகிறது... சிவப்பு காம உணர்வைத் தூண்டக் கூடிய சக்திவாய்ந்த நிறம் அதே நேரத்திலே உடல் ஆரோக்கியத்துக்கு ஓரளவு சிவப்பு தேவைப்படுகிறது.

அதனாலே காவி உடை அணிந்தால்.. சூரிய ஒளி ஓரளவு சிவப்பை விலக்கிவிடும்... அதாவது சிவப்பின் பலனும் கிடைக்கும். சிவப்பின் கெடுத்தலும் இல்லை!

காவி உதய வேளையின் நிறம்... கீழ் வானத்திலே... கதிர் உதிக்கிற வேளையிலே... முதல் ஒளி தோன்றும் நேரத்திலே காவி நிறம் தான் கசியும்.

தியானம் செய்யும்போது முதலிலே காணும் ஒளி காவி நிறம் தான். தியானத்தின் உச்ச நிலையின் நிறம் நீலம். தியானம் காவி நிறத்தில் ஆரம்பமாகி நீல நிறத்திலே நிறைவடைகிறது என்கிறார் ஓஷோ.

நீலம் தியான சிகரம். காவி தியான ஆரம்பக் குறியீடு! ஒரு சந்நியாசியின் ஆரம்ப தரிசனம் என்கிறார் அவர்.

ஒருவர் நாள் முழுதும் காவி உடையே அணிந்திருந்தால் அந்த நிறம் அவருக்குத் தியானத்தைப் பற்றிய நினைவை ஊட்டிக்கொண்டேயிருக்கும். இப்படியே ஆடைக்கும் தியானத்துக்கும் இடையிலே ஒரு தொடர் ஏற்படுகிறது. ஒரு துறவியின் உள்ளார்ந்த பண்பாக அது மாறுகிறது.

கடை வீதியிலே ஒரு பொருளை வாங்கப் போகின்றோம். அது மறந்துவிடக் கூடாது என்பதற்காக ஞாபக முடிச்சுப் போட்டுக் கொள்கிறோம். அந்த முடிச்சுக்கும் பொருளுக்கும் தொடர்பில்லை. ஆனால்... கடை வீதிக்குப் போனவுடனே அந்த முடிச்சு... அந்தப் பொருளை ஞாபகப்படுத்துகிறது. அந்த முடிச்சு ஒரு தொடர்பு அம்சமாக அமைகிறது.

அதே மாதிரித் தான் காவி உடையும். ஒரு துறவி நடக்கும் போது... சாப்பிடும் போதும்... குளிக்கும் போது அவருடைய காவியுடை அவருக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும். அது ஒரு நிலைப்படுத்தப்பட்ட நினைவாக, ஞாபக முடிச்சாக மாறி விடுகிறது.

காவி ஆடை இல்லையென்றால் ஒருவராலே துறவியாக முடியாது என்று அர்த்தமில்லை. அதேநேரத்திலே காவியாடையிலே அர்த்தமில்லையென்றும் சொல்ல முடியாது.

இவ்வளவு தூரம் காவி ஆடையைப் பற்றிச் சொல்வதனாலே... எல்லாரும் சந்நியாசியாகப் போங்கள் என்று நான் சொல்வதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. மனத்துக்கும் -நிறத்துக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் இவ்வளவும் !

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருந்தார். ஆபீஸிலே வேலை பார்க்கிறவர். ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்குப் பிறகு அவரைப் போய்ப் பார்த்தால்... காவி உடை அணிந்துகொண்டு... கண்ணை மூடிக்கொண்டு கை இரண்டையும் விரித்து வைத்துக்கொண்டு தியானத்திலே இருப்பார்.

"ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டேன். "அதாவது... 20ஆம் திகதிக்குப் பிறகு என் கையிலே ஒரு பைசா கூடக் கிடையாது... ஒரு சந்நியாசி லெவலிலே இருக்கிறேன்... என்னிடம் எதுவும் செலவுக்குக் கேட்காதே... என்று என் மனைவிக்கு நாசூக்காக உணர்த்துவதற்காக அப்படி உட்கார்ந்திருப்பேன்!" அப்படியென்று விளக்கம் கொடுத்தார் அவர்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சம்பள சுற்று நிருப முரண்பாடுகள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்

2006ஆம் ஆண்டு சம்பள சுற்றுநிருபத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை சம்பள ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இதன் பிரகாரம் சம்பள பிரச்சினைக்கு மூன்று கட்டங்களில் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சம்பள முரண்பாடுகள் தொடர்பாக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். சகல சம்பள பிரச்சினைகளும் சம்பள ஆணைக்குழுவின் மூலமாகவே தீர்க்கப்படும் என்று நீதிமன்றத்தின் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் அதேவேளை நாட்டின் அபிவிருத்திக்காக பாடுபடுகின்ற அரசு ஊழியர்களுக்கு எந்தவொரு வரிகளும் அறவிடப்படாமல் சம்பளம் வழங்கப்பட்டதுடன் பல வரப்பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற மனிதாபிமான நடவடிக்கைகளுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் அரச ஊழியர்கள் மட்டுமல்லாது இதர மக்களும் கடமைப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் இடம்பெறுகின்ற நடவடிக்கைகள் இரண்டு நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள யுத்தமல்ல. ஆயுதம் தூக்கியுள்ள பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையாகும். பாடசாலை, வைத்தியசாலை மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்த கிழக்கு மாகாண மக்களை படையினர் மீட்டெடுத்துள்ளதுடன் அப்பகுதிக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்கின்ற போது சில அரசியல்வாதிகள் நாடு நாடாகச் சென்று இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் மனிதர்கள் காணாமல் போவதாகவும் தமிழ் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் கூறி நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றனர்.

எவ்வாறான அச்சுறுத்தல்கள் இருந்தாலும் எதிர்காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதற்கு இந் நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். (அ-5)

# பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை பயன்படுத்தியே கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன

## பொலிஸ்மா அதிபர் தகவல்

பொலிஸ் திணைக்களத்திற்கும் அரசாங்கத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் பொலிஸாருக்கு வழங்கப்படுகின்ற அடையாள அட்டையைப் பயன்படுத்தியே நாட்டில் கடத்தல் சம்பவம் இடம் பெறுவதாக பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு குழுவொன்று செயல்படுவதாகவும் அந்தக் குழு வெள்ளை நிற வானில் வந்து கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதாகவும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி விளையாட்டுத் துப்பாக்கி மூலமாக அச்சுறுத்தி கப்பம் பெறும் விளையாட்டுக்கு பொலிஸாரிடம் இடமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்றும் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த குற்றச்செயல்களை ஒழிப்பதற்கு பொலிஸ் திணைக்களம் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இந்த வருடத்தில் முதல் ஐந்து மாதங்களுக்குள் 400 கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. இதில் சுமார் 250 சம்பவங்கள் காதல் தொடர்பினால் இடம்பெற்ற சம்பவங்கள் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பாதாள குழுக்கள் கப்பம் பெறுவதற்காக கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான ஆயுதக் குழுக்கள் நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றது. அதற்கு பொலிஸ் திணைக்களம் இடம் வழங்காது.

அத்துடன் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் பொலிஸ் திணைக்களத்தில் விமானப்படை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக காட்டுப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கஞ்சா பயிர் செய்கையை அழிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக விமானப் படையிலிருந்து விமானம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பிரதான நகரங்களில் இடம்பெறுகின்ற போக்குவரத்து நெரிசல்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார். (அ-5)

# மார்க்ஸ் ருகுணு கப்பலில் யாழ். குடாவுக்கு கட்டடப் பொருட்கள் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு கட்டட நிர்மாணப் பணிகளுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான கட்டடப்பொருட்களை அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான மூலப்பொருட்களான சீமெந்து 1500 மெற்றிக் தொன், கூரைத் தகடுகள் 407 மெற்றிக் தொன், இரும்புக் கம்பிகள், அலுமினியம், கண்ணாடி உள்ளிட்ட மின்சார உபகரணங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மார்க்ஸ் ருகுணு கப்பலின் மூலம் இந்த பொருட்கள் நேற்றிரவு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கட்டடங்களை நிர்மாணிக்கின்ற பொழுது தேசிய பாதுகாப்பிற்கு பங்கத்தை ஏற்படுத்தாத வகையில் இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனையையடுத்து கட்டட நிர்மாணத்திற்கான மூலப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற பாடசாலைகளின் கல்வி நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு அப்பியாசக் கொப்பிகள், மின்சார உபகரணங்கள், ஜெனரேட்டர், டயர் போன்ற பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் ஆலோசகர் பஷில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைக்குப்பின்னரே அரசாங்கம் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# ஆலோசகர்களுக்கான செலவு மாதம் பத்து இலட்சம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆலோசகர்களாக இருக்கும் 25 பேருக்கு அரசு ஊதியமாக 820,000 ரூபாவினை செலவு செய்து வருகின்றது.

25 ஆலோசகர்களின் செயலாளர்கள் மற்றும் கைத்தொலைபேசி ,எரிபொருள் என்பவற்றுக்கு 246,410 ரூபா செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த துறவிகளான மாத்தளே அமரவணன்ஸ தேரர் , வல்பொல பிரியந்த தேரர் மற்றும் ஜயந்த தனபால, வாசுதேவ நாணயக்கார, ஜயவர்த்தன, விஜயகோன், ஹரீந்திர வித்தானகே, காமினி குணரத்ன, மஞ்சு கத்தோட்டுவ, அனுரா சொமலமன்ஸ் ஆகியோர் உட்பட பலர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறப்பு ஆலோசகர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், இடதுசாரிக் கட்சியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார ஆலோசகராகச் செயலாற்றுவதற்கு 60,000 ரூபா வேதனமும் கைத்தொலைபேசிச் செலவுக்கென 7500 ரூபாவையும் பெற்று வருகின்றார்.

இவருடன் லக்ஸமன் ஜெயக்கொடி, றொனி டி மெல், சுனிமல் பெர்னான்டோ, தம்மிக்க அமரசிங்க, றொஹான் வீரசிங்க, தயா உபாலி ஹேவாவித்தாரண ஆகியோரும் 60,000 ரூபாவையும் வேதனமாகப் பெற்று வருகின்றனர். (அ-5)

நரி உபதேசம் செய்யத் தொடங்கினால் முதலில் உன் கோழிகளைக் கவனி.

—அல்பேனியப் பழமொழி

வலம்புரி

# இனப்பிரச்சினைத் தீர்வில் அமெரிக்காவின் உற்சாகம்

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அமெரிக்கா அதிவேகம் காட்டி வருகின்றது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கை தொடர்பான விவாதத்தைத் தொடர்ந்து இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் கருணை அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர், இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நோர்வே மற்றும் இணைத்தலைமை நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா செயலாற்றும் எனக் கூறியுள்ளார்.

கூடவே இலங்கை அதிகாரிகளுடனும் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கவுள்ளதாகக் கூறும் அமெரிக்கா, சமாதானப் பேச்சுவார்த்தையில் இருதரப்பையும் சந்திக்க வைப்பது தொடர்பில் எதனையும் கூறவில்லை.

அண்மைக்காலமாக, இனப்பிரச்சினைவிடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தம் வேகமெடுத்துள்ள நிலையில், அமெரிக்கா அதற்கான தலைமைப் பொறுப்பை ஏற்கும்போல் தெரிகின்றது.

இலங்கை அரசின் சார்பாகச் செயற்பட்டு வந்த அமெரிக்காவுக்கு உண்மையைப் புரிந்து கொள்வதற்குப் பல வருடங்கள் எடுத்தன.

அல்லது உண்மையைப் புரிந்து கொண்டாலும் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படுவதன் மூலமாக தனது இலக்குகளை அடையலாம் என அமெரிக்கா கருதியிருக்கலாம்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு பதவி இழந்து போனதும் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான மிலிந்த மொறகொட அமைச்சுப் பதவியைத் துறந்ததும் அமெரிக்காவின் இலக்கு அசைவடையக் காரணம் எனலாம்.

அதேநேரம் தனது சொல்லை உலகநாடுகள் அனைத்தும் செவிமடுக்க வேண்டுமென நினைக்கும் அமெரிக்கா அதிலிருந்து இலங்கைக்கு விதிவிலக்களிக்க வேண்டுமென எண்ணியிருக்க மாட்டாது.

எனினும் உலக நாடுகளின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தூக்கி எறியும் வகையில் இலங்கை அரசு நடந்து வருகின்றது. இதில் அமெரிக்காவும் விதிவிலக்கல்ல என்ற தொனிப்புத் தெரிவதையும் மறப்பதற்கில்லை.

இவை அமெரிக்காவுக்கு இலங்கை மீது அதீத ஆத்திரத்தை உண்டுபண்ணியுள்ளது எனலாம்.

இவையாவற்றுக்கும் மேலாக இலங்கை விவகாரம் குறித்து விவாதம் நடத்திய பிரிட்டன் மீது ஆத்திரம் கொண்ட இலங்கை ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் பிரிட்டனை கடுமையாகத் தாக்க முற்பட்டன.

இந்தத் தாக்குதலில் அமெரிக்காவும் பாதிக்கப்பட்டுவிட்டது. அதாவது இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் கூறும் யோக்கியதை பிரிட்டனுக்கு இல்லை.

ஈராக்கில் தனது படைகள் மூலம் மனித உரிமையை மீறிய பிரிட்டனுக்கு இலங்கையைப் பற்றிப் பேசத் தகுதியுண்டா? என இலங்கைப் பேரினவாதிகள் எழுப்பிய கேள்வி அமெரிக்காவின் தலையில் பலத்த அடியாக விழுந்தது.

முன்பின் சிந்தியாத பேரினவாதிகளின் நாக்கு அமெரிக்காவின் கொள்கையை மாற்றுவதற்கு துணைபுரிந்ததென்றால் அதனை மறுப்பதற்கான நியாயப்பாடுகள் இல்லை என்றே கூற வேண்டும்.

# புலிகளை யுத்தத்தில் தோல்வியுறச் செய்தாலும் இறுதித் தீர்வு காண அரசியல் தீர்வு தேவை

## ஐ.தே.க. எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின், அரசாங்கம் உடனடியாக அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். அரசியல் தீர்வொன்றை முன்வைக்காத நிலையில் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. புலிகளை யுத்தத்தின் மூலம் தோல்வியுறச் செய்தாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது இறுதியில் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் பாராளுமன்றத்தில் முன்வைத்த ஒத்திவைப்புப் பிரேரணையில் கலந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான நிறுவப்பட்டுள்ள சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரணவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்திற்கு ஏற்ப பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவேயிருக்கின்றது.

எனினும் அரசாங்கம் அந்த யோசனையை கலந்துரையாடுவதற்கு எடுத்துக் கொள்ளவில்லை. இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் உடனடியாக அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று சர்வதேச, இந்தியா மற்றும் இதர நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

விடுதலைப்புலிகளை யுத்தத்தின் மூலமாகத் தோல்வியடையச் செய்தாலும் இறுதியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகின்ற போது அரசியல் தீர்வு ஒன்று தேவை. அரசியல் தீர்வெர்வை முன்வைக்காமல் பேச்சுவார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இந்தப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணலாம் என்று சிலர் கூறிவருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசியல் தீர்வொன்றை முன்வைப்பது மூலமாக உடனடியாகப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் இலங்கை அகதிகள் உடனடியாக நாட்டுக்கு மீண்டும் திரும்பக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இலங்கை அகதிகள் நாட்டிற்கு வெளியே இருப்பது நாட்டிற்கு எதிர்காலங்களில் பெரும் ஆபத்தைத் தோற்றுவிக்கும் என்பதனால் மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவினை நல்குவதோடு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறும் அரசாங்கத்திடம் கோரி நிற்கின்றது என்றார். (ந-5)

# இலங்கையில் அனைத்துலகத்தின் ஈடுபாடுகள் அதிகரிக்க வேண்டும்; பிரித்தானியா பா.உ. வலியுறுத்தல்

இலங்கை நிலைமைகள் குறித்து அனைத்துலகத்தின் ஈடுபாடுகள் அதிகரிக்க வேண்டும் என்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஹெய்த் வாஸ் வலியுறுத்தியுள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கான நேர்காணலில் அவர் கூறியுள்ளதாவது,

இலங்கை விடயத்தில் அனைத்துலகத்தின் ஈடுபாடுகள் அதிகம் இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். மோதல்களில் ஈடுபடும் தரப்புக்களை ஒரு அமைதி வழியிலான தீர்வைக் காண்பதற்குக் கொண்டு வரும் முயற்சிகளுக்காக அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள், பயங்கரவாதச் செயல்கள் போன்றவற்றில் எந்தக் குழுவினர் ஈடுபட்டாலும் அது கண்டிக்கப்பட வேண்டியது. நானோ அல்லது எமது எந்த அங்கத்தவர்களோ விடுதலைப்புலிகளைச் சந்தித்து இல்லை.

இலங்கையில் நடைபெறும் போர் குறித்து அக்கறை கொள்வோர் மீது குற்றங்களைச் சுமத்துவது அவநம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு அமைதி வழியிலான தீர்வுக்கான அழைப்பை விடுத்துள்ளதுடன் மனித உரிமை மீறல்கள், பயங்கரவாதச் செயல்களையும் கண்டிக்கின்றது.

அனைத்துக் கட்சி குழுவானது பிரித்தானியா அரசின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை. எனினும் அது பிரித்தானியாவின் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பல மூத்தஉறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அமைதியோ அல்லது அமைதிக்கான நம்பிக்கைகளோ அற்ற நிலையில் இலங்கையிலுள்ள மக்கள் தொடர்ச்சியாகத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும். எனவேதான் அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழு மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும் என விரும்புகின்றது என்றார்.

இலங்கையில் ஒரு அமைதியான தீர்வை எட்டுவதற்குரிய பேச்சுக்களுக்கு விடுதலைப்புலிகள் மீதான பிரித்தானியாவின் தடைகள் காரணம் எனவும் அனைத்துத் தரப்பினரும் பேச்சுக்களில் ஈடுபட்டு ஒரு தீர்வைக் காண்பதற்கு தடை நீக்கப்பட வேண்டும் எனவும் முன்னர் பிரித்தானியாவின் பாராளுமன்றத்தில் வாஸ் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

# கல்விப் பெறுபேறு வீழ்ச்சியை நிவர்த்திக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

## ஜூன் 8 ஆம் திகதி புத்திஜீவிகளுடன் விசேட சந்திப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், உயர் தரப் பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகள் குறைவடைந்து வருவதனால் அதனை நிவர்த்தி செய்து பெறுபேற்றை அதிகரிக்கச் செய்ய கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் பல்கலைக்கழக பேராசிரியர்களை அவர் சந்தித்து ஆராய்ந்துள்ளார். சந்திப்பில் தமிழ் மொழிமூலம் சார்பில் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர்களான சந்திரசேகரன், கருணாநிதி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் செல்வராஜா ஆகியோர் கலந்து கொண்டதுடன் சிங்கள மொழி மூலமான பேராசிரியர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இச் சந்திப்பின் போது பெறுபேறுகள் குறைவடைவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை பேராசிரியர்கள் முன்வைத்தனர்.

❖ பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் ஏதோவொரு காரணத்திற்காகத் தினமும் 20 வீதமானவர்வரை விடுமுறை எடுக்கின்றனர்.

❖ பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சென்றிருந்த போதும் குறித்த வீதமானோர் மாணவர்களுக்கான கற்பித்தில் ஈடுபடுவதில்லை.

❖ பாடப் புத்தகங்கள் சரியான நேரத்தில் வழங்கப்படாமையினால் உரிய காலப் பகுதிக்குள் பாடவிதானங்கள் கற்பித்து முடிப்பதில்லை.

❖ பாடசாலை ஆசிரியர்களுக்கான கைந்நூல்கள், கற்பித்தல் வழிகாட்டல் நூல்கள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை.

❖ பாடசாலைகளில் காணப்படும் பௌதிக வளங்களின் அருமைத் தன்மை.

❖ பாடசாலை மாணவர்களின் பெற்றோரின் அக்கறையின்மை

என பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகப் பேராசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே நாட்டின் கல்விவளர்ச்சியை ஏற்படுத்த எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி பல்வேறு துறைசார்ந்த பேராசிரியர்கள் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த கல்விமான்கள், கல்வித் திணைக்களம் மற்றும் பரீட்சைத் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும்இணைந்து மேற்படி விடயம் தொடர்பில் ஆய்வு செய்யவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

மேலும் ஜூலை 8 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட கல்வியாளர்களுடன் தேசிய கல்வி நிறுவனமும் மற்றும் தேசிய ஆணைக்குழுவும் இணைந்து ஆராய்ந்து கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் திட்டமிட்டுள்ளார் என அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா மேலும் தெரிவித்தார். (ந-5)

# பிரிவு உபசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற பொ.கமலநாதனுக்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து பிரிவுபசார நிகழ்வொன்றினை நடத்தவுள்ளன.

இன்று காலை 11 மணிக்கு கல்லூரியில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பழைய மாணவர் சங்கத் தலைவரும் ஓய்வு பெற்ற அதிபருமான அ.பஞ்சலிங்கம் தலைமைவகிப்பார். (ந)

# பதில் பிரதம நீதியரசராக நிகால் டி சில்வா ஜெயசிங்க

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதிமன்ற நீதியரசர் நிகால் டி சில்வா ஜெயசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதில் பிரதம நீதியரசராக நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வெளிநாடு சென்றுள்ள பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நாடு திரும்பும் வரையான காலப் பகுதிக்கு இந் நியமனம்வழங்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ந-3)

## கல்வியியல் கல்லூரியில்

# டிப்ளோமா முடித்தவர்களுக்கு அடுத்த மாதம் நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து டிப்ளோமா முடித்து வெளியேறிய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 251 பேருக்கு அடுத்த மாதம் முற்பகுதியில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

இவர்களில் யாழ்ப்பாணத்தில் 137 பேரும் அம்பாறையில் 9 பேரும் வவுனியாவில் 46 பேரும் கிளிநொச்சியில் 8 பேரும், முல்லைத்தீவில் 21 பேரும், மன்னாரில் 11 பேரும்,திருகோணமலையில் 9 பேரும் மற்றும் மட்டக்களப்பில் 10 பேருமாக 251 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் இதில் 2 பேர் சிங்கள மொழி மூலமானவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# கனிமொழியை அரசியல் வாரிசாக்கும் கலைஞர்

(சென்னை)

நடக்கவுள்ள மேலவைத் தேர்தலுக்கான தமது வேட்பாளர்களை தி.மு.க நேற்று அறிவித்துள்ளது. தனது மகள் கனிமொழியை மேலவை உறுப்பினர் பதவிக்காக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி பரிந்துரை செய்துள்ளார்.

ஆனால் அவருக்கு உடனடியாக மத்திய அமைச்சர் பதவி வழங்கப்படாது என்றும் தி.மு.க.தலைவர் கூறியுள்ளார்.

தி.மு.க.தலைவரின் மகனான மு.க.ஸ்ராலின் ஏற்கனவே தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளார். இவரது சகோதரர் மு.க. அழகிரி கட்சியிலும் ஆட்சியிலும் முறைப்படி பதவியில் இல்லா விட்டாலும் தென்மாவட்டங்களில் தி.மு.கவை இவர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவே அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

இது தவிர கருணாநிதியின் மருமகனான முரசொலி மாறனின் மகனான தயாநிதி மாறன் 2004 ஆம் ஆண்டு அரசியலுக்கு கொண்டுவரப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்டு உடனடியாக மத்திய அமைச்சராகவும் ஆக்கப்பட்டார்.

மூன்று வாரங்களுக்கு முன்பு தினகரன் நாளிதழின் மதுரை அலுவலகம் தாக்கப்பட்டதையடுத்து கருணாநிதியின் குடும்பத்திற்கும்-முரசொலிமாறனின் குடும்பத்திற்கும் இடையேயான விரிசல் அதிகமானதாக ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர்.

இந் நிலையில் தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி தனது மகளான கனிமொழியை தற்போது அரசியலுக்குக் கொண்டுவந்துள்ளார். தி.மு.க.சார்பில் திருச்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாவும் இத் தேர்தலில் களமிறக்கப்படவுள்ளார்.

கட்சியில் தான் பல ஆண்டுகளாக இருந்ததாக தெரிவித்த கனிமொழி வாரிசு அரசியல் குறித்து செய்யப்படும் விமர்சனம் தொடர்பான கேள்விகளை தனக்கு பதவி அளிக்க முடிபு செய்தவர்களிடம்தான் கேட்கவேண்டும் என்று கூறினார். (ந-5)


## SRI LANKA RED CROSS SOCIERTY

*The under mentioned professionals need to be recruited for project implantation*

| POST | QUALIFICATION&EXPERINCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| ASSISTANT DISTRICT MANAGERS (01position) Jaffna (01) Job Ref #. HRM 194 Duration | Bachelor degree or a Advance Diploma in the field of Development Economics And At least three(10)years experience in empowering communities and working with community based organization Six Months may be extended for another six months | •Assist the District Manager to coordinate with relevant Governmental and non Governmental agencies and community organizations in the designated areas on the project: •Liaise effectively with the project staff •Attend the project Steering Committee at District •Assist the District Manager in administration work •Assist the District Manager to organize District plan for Rapid Action (CPRA) and identify settlements and Community Action Plans (CAP) •Assessing the needs and analyze the status of the selected communities •Supervise the compliance of the Project activities with the objectives and straiegy of the project •Ensure the empowerment of the poor and disad vantaged community members to identify and articulate their needs and priorities through particpatory process •Ensure the visibility of the project and the IFRC/ SLRC contribution in the field •Undertake any additional tasks assigned from time to time by the District Manager |
| COMMUNITY MOBILISERS (02 POSITION) Jaffna Job Ref.# HRM 195 Duration | A mature personality with a diploma/ degree related to Sociology or Social Science. At least 3 years experience in development/ construction activities with the public sector non governmental organizations or international agencies will be required Experience in working with communities will be a significant qualification Six Months may be extended for another six months | •He/She should work closely with the project team. The person will perform the role of a facilitator to catalyze selected urban communities towards self-reliance and to evolve their own processes for recosns tructing their communities. •He/She will assist communities in social organization: such as forming community development councils:managing such community-based organi zations to initiate community action planning and toimplement community contracts and housing re construction programmes. •Should have the ability to advise communities on participatory processes: |

**Salary-Attractive for Both positions**

**Other Requirements for the above positions**

**High Degree of Computer literacy inter personal skills effective communication and management skills,a good knowledge of English and ability to work independently is essential.**

**The community mobiliseres should have an excellent command of Sinhala or Tamil,with a good knowledge of English Age below 45 years for all positions**

**Red Cross is an equal opportunity employer.**

**Only the short listed candidates will be contacted for the interviews**

**Applications should be submitted no later than 15 th June 2007 to:**

*Branch Executive Officer,*
*Sri Lanka Red Cross Society,*
*73,Kandy Road, Jaffna.*

**Please quote the job reference # and the post you are applying for on top left-hand corner of the envelope.**

*(C-120)*


# புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வும் மருத்துவ ஆலோசனையும்

யாழில் புற்றுநோய்க்கான கதிர்வீச்சு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதிவரை கண்காட்சியுடன் கூடிய புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வும் மருத்துவ ஆலோசனையும் ஐந்து பாடசாலைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

4 ஆம் திகதி யா/இந்துமகளிர் கல்லூரி, 5 ஆம் திகதி வட்டு இந்துக்கல்லூரி, 6 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், 7 ஆம் திகதி அச்சுவேலி மத்திய கல்லூரி, 8 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இந் நிகழ்வானது உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.புற்று நோய் சிகிச்சைப்பிரிவினதும் மற்றும் மருத்துவ பீடத்தினது பங்களிப்புடனும் நடைபெறவுள்ளது. (அ)

## அதிபர் சேவைக்கான...

அவற்றின் ஒவ்வொரு பிரதியை பரீட்சையின் போது நேரில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தெரிவித்த அவர், ஆவணங்களிற்கு புள்ளிகள் வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

ஆவணங்களின் விபரம் ,ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை,பிறப்புச் சான்றிதழ், ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற கடிதம், பட்டதாரியாயின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டச்சான்றிதழ்,டிப்ளோமாச் சான்றிதழ், 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டுவரை கடமையின் போது பெறப்பட்ட லீவு விபரங்கள், முதலாம் திகதி ஜனவரி மாதம் 2007 ஆம் ஆண்டுக்கு முன்னரான 5 ஆண்டுகள் கடமையில் ஒழுக்காற்று நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதை உறுதிசெய்யும் வலயக்கல்விப் பணிப்பாளரின் கடிதம், கல்வித்துறை சார்ந்த ஆய்வுகள்,கட்டுரைகள், செயற்திட்டங்கள் தயாரித்திருப்பின் அதிபர் அல்லது வலயக்கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

ஆங்கில மொழித் தேர்ச்சியை உறுதிப்படுத்த கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ், 1990 ஆம் ஆண்டு முதல் 31 ஆம் திகதி டிசம்பர் 2006 ஆம் ஆண்டு வரை உள்ள காலப்பகுதியில் கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றியது தொடர்பான அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ், பாடசாலை அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்புச் செய்தமை தொடர்பாக அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

கற்றல் ,கற்பித்தலிற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்தி செய்வதற்காக பல்வேறு துறைகளில் செயற்பட்ட சேவையை அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

இதேவேளை வவுனியா,மன்னார் மாவட்டங்களில் ஜூன் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் திகதிகளிலும் மற்றும் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 ஆம் திகதியும் நேர்முகப்பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் வடமாகாணச் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

எனினும் தற்போது ஏ-9 வீதி ஓமந்தைச் சோதனைச்சாவடி மூடப்பட்டுள்ளமையால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிற்கான நேர்முகப்பரீட்சையை திட்டமிட்டபடி நடாத்துவதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

## யாழ்ப்பாணத்தைச்...

வாங்குவதற்காக கடந்த ஜனவரி மாதம் விமானம் மூலம் கொழும்பு வந்தனர். கைக்கடிகாரங்களுக்கான பற்றறிகளை வாங்கி தாங்கள் தங்கியிருந்த விடுதியில் வைத்திருந்தனர்.யாழ்ப்பாணத்திற்கு அந்த வர்த்தகர்கள் புறப்படுவதற்கு முதல் நாள் வர்த்தகர்கள் தங்கியிருந்த விடுதியை சோதனையிட்ட பொலிஸார் அவர்களை விடுதலைப் புலிகள் எனக்கூறி கைதுசெய்தனர்.

இந்த வழக்கையும் விசாரித்த கல்கிசை நீதிமன்றம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய மூவரையும் விடுவித்தது. (ந-5)

## சோதனைச்சாவடிகள்...

சாவடிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தையடுத்தே அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது விடயத்தில் இன்னுமோர் இணக்கப்பாடு எட்டப்படாத நிலைமை தொடர்கின்றது. இதனால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்கள் மீளவும் தங்களின் இருப்பிடங்களுக்கு திரும்பமுடியாமலுள்ளது. (ந-5)

## எரிபொருளின்...

தையடுத்து தமது எரிபொருட்களின் விலையை அதிகரிப்பதைதவிர வேறு வழியில்லை எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் அசந்த டி மெல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பெற்றோல்,டீசல், மண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டமை தெரிந்ததே. (ந-5)

## இலங்கைக்கான நிதியுதவியை...

நிறுத்துவதற்கான எந்த எண்ணமும் இல்லையெனவும் தெரிவித் துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் யப்பான் முன்னிலையில் உள்ளது. 2003 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற இலங்கையின் அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சுமார் 45 ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேற்பட்ட நிதியைப் பெற்றுத்தர யப்பான் நடவடிக்கை எடுத்திருந்தது. இதில் பெருந்தொகையான பணத்தை யப்பானிய அரசாங்கம் வழங்க முன்வந்திருந்தது.

எனினும் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிவடைந்ததையடுத்து அவ் நிதியை இலங்கைக்கு பெற்றுத் தருவது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் யப்பான் அரசாங்கம் இலங்கைக்கு சாதாரணமாக வழங்கிவரும் உதவிகளை தொடர்ந்தும் வழங்குமென நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3,5)

## மிக் ரக யுத்த...

மிக்-29 ரக யுத்த விமானங்களுக்காக 800 கோடி இலங்கை ரூபாய்களை ஒதுக்கியுள்ள அரசாங்கம் மேலும் நான்கு எம்.ஐ-24 உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. (ந-5)

## இலங்கை மீது யப்பான்...

எனினும் ஜேர்மனி மற்றும் பிரித்தானியா ஆகிய அரசுகளின் தீர்மானங்களைப் பின்பற்றி இலங்கைக்கான நிதி உதவிகளை மட்டுப்படுத்தும் நோக்கம் யப்பானுக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யப்பான் அதிகாரிகள் உடனான சந்திப்பின் பின்னர் இது தொடர்பாக மனித உரிமை கண்காணிப்பகத்தினைச் சேர்ந்த சோபி றிச்சாட்சன் தெரிவித்துள்ளதாவது;

கடந்த ஆண்டு இலங்கையில் மனித உரிமைகள் மோசமடைந்துள்ளது. மார்ச் மாதத்தில் மட்டும் ஒரு இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என நான் நினைக்கின்றேன்.

இலங்கைக்கான உதவிகளை வழங்கும் கொடையாளிகளில் யப்பான் மிகவும் அதிகளவு நிதிகளை வழங்கும்நாடு. அனைத்துலகத்தினால் வழங்கப்படும் நிதிகளில் யப்பான் 63 வீதமான நிதியை 2003 ஆம் ஆண்டு வழங்கியிருந்தது.

4.5 பில்லியன் டொலர் உதவிகளை இலங்கைக்கு வழங்குவதற்கென 2003 ஆம் ஆண்டு ஒரு மாநாட்டை யப்பான் ஒழுங்கு செய்திருந்தது.

இலங்கை தொடர்பில் யப்பான் முக்கிய பாத்திரத்தை வகித்து வருகின்றது. அது முன்னணிக் கொடையாளி. அது கொடையாளிகளின் ஆலோசனைக்குழுவை ஒருங்கிணைக்கிறது.

நாம் யப்பானை என்ன கேட்கிறோம் எனில், அந்த நிலையை சாதகமாகக் கொண்டு அரசையும் ஏனைய தரப்பினரையும் பொதுமக்களையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு உறுதியாக கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.